

எடப்பாடி பழனிசாமி, ஓ.பன்னீர்செல்வம் தலைமையில் அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் வெளிநடப்பு செய்த காட்சி.

### பட்ஜெட் உரையை புறக்கணித்து

# அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் வெளிநடப்பு

தமிழக சட்டசபை இன்று காலை 10 மணிக்கு கூடியதும் சபாநாயகர் அப்பாவு. 'இந்த தடவை தமிழக சட்டசபையில் இ-பட்ஜெட் தாக்கல் செய்யப்படுகிறது என்று தெரிவித்தார்.

அதன்பிறகு அவர் நிதி அமைச்சர் பழனிவேல் தியாக ராஜனை நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்யும்படி கேட்டுக் கொண்டார்.

**அ.தி.மு.க. கோரிக்கை**

அப்போது எதிர்கட்சி தலை வர் எடப்பாடி பழனி சாமி எழுந்து பேசத்தொடங்கி னார். ஆனால் அவருக்கு மைக் இணைப்பு வழங்கப் படவில்லை. இதனால் அவர் என்ன பேசுகிறார் என்பது யாருக்கும் கேட்கவில்லை.

இதற்கிடையே சபாநாயகர் குறுக்கிட்டு பேசினார். அவர் கூறியதாவது:-

**வாய்ப்பு தரப்படும்**

அ.தி.மு,க. உறுப்பினர்கள் அனைவரும் அமைதியாக தங்கள் இருக்கையில் அமர வேண்டும். இன்று முதன் முதலாக இ-பட்ஜெட் தாக்கல் செய்யப்படுகிறது. திங்கட்கிழமை விவாதம் நடைபெறும்.

அன்றைய தினம் உங்களது கருத்துக்களை நீங்கள் தெரிவிக்கலாம் திங்கட் கிழமை நீங்கள் பேசுவதற்கு உரிய வாய்ப்பு தருகிறேன்.

இவ்வாறு சபாநாயகர் கூறினார்.

**கூச்சல்**

ஆனால் எதிர்கட்சி தலை வர் எடப்பாடி பழனிசாமி அதை ஏற்க வில்லை. தொடர்ந்து அவர் பேசினார். அவர் கையில் இருந்த குறிப்பு களை பார்த்து வாசித்தார்.

ஆனால் அவருக்கு மைக் இணைப்பு கொடுக்கப் படாததால் அவர் பேச்சு கேட்கவில்லை. இந்த நிலையில் அவருக்கு ஆதர வாக அ.தி.மு.க எம்.எல். ஏ.க்கள் அனைவரும் எழுந்து கோஷமிட்டனர்.

இதனால் சபையில் கூச்சல் நிலவியது. அமளிகாரணமாக அ.தி.மு.கவினர் பேசியது கேட்கவில்லை.

**வெளிநடப்பு**

அ.தி.மு.க.வினர் பேசு வதற்கு வாய்ப்பு வழங்க இயலாது என்று சபாநாயகர் அப்பாவு திட்டவட்டமாக தெரிவித்தார். மேலும் நிதி நிலை அறிக்கையை தாக்கல் செய்யவும் கேட்டுக் கொண்டார்.

அதன்படி நிதி அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் கூச்சல், அமளிக்கு மத்தியில் பட்ஜெட் உரையை வாசிக் கத்தொடங்கினார். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து எடப்பாடி பழனிசாமி தலைமையில் அ.தி.மு.க. எம்.எல்.ஏக்கள் அனைவரும் வெளிநடப்பு செய்தனர்.


இன்றைய மாலைமலருடன்



திருமண தடை நீக்கும்
மேல்மலையனூர்
அங்காளம்மன்
24 பக்க புத்தகம்
கேட்டு வாங்குங்கள்


### லஞ்ச ஒழிப்பு போலீஸ் நடவடிக்கையை சட்டப்படி சந்திப்போம்

# தி.மு.க. வாக்குறுதிகளை நிறைவேற்றாததால் வெளிநடப்பு செய்தோம்

## எடப்பாடி பழனிசாமி பேட்டி

சென்னை, ஆக. 13-

தமிழக சட்டசபையில் இன்று பட்ஜெட் உரையை புறக்கணித்து அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் வெளிநடப்பு செய்தனர்.

**எடப்பாடிபழனிசாமி-ஓ.பி.எஸ். பேட்டி**

பின்னர் சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் எடப் பாடி பழனிசாமி, துணைத் தலைவர் ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் நிருபர்களுக்கு பேட்டியளித்தனர். அப் போது எடப்பாடி பழனிசாமி கூறியதாவது:-

நடந்து முடிந்த சட்டமன் தேர்தலின்போது 505-க் கும் மேற்பட்ட நடை முறைப்படுத்த முடியாத வாக்குறுதிகளை நிறைவேற்று வதாக கூறி தி.மு.க. ஆட்சிக்கு வந்துள்ளது.

**வெளிநடப்பு**

தேர்தல் நேரத்தின் போது ஆட்சி பொறுப்பேற்றவுடன் நீட் தேர்வை ரத்து செய்து முதல் கையெழுத்தை போடு வேன் என்று மு.க.ஸ்டாலின் கூறினார்.

ஆட்சிக்கு வந்து 100 நாட்கள் ஆகியும் இதற்கு எந்த தீர்வும் எட்டப்படவில்லை. மேலும் நீட் தேர்வு விலக்கு கிடைக்கும் வரை மாண வர்கள் நீட் தேர்வுக்கு நன்கு படித்து தயாராக வேண்டும் என்று கூறி தெளிவான அறிவிப்பை வெளியிடா மல் மாணவர்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தி னார்கள். இதனை கண்டித்து வெளிநடப்பு செய்தோம்.

**வெள்ளை அறிக்கை**

வெள்ளை அறிக்கை என்ற பெயரில் வெற்று அறிக்கையை வெளியிட் டுள்ளனர். 14-வது நிதிக்குழு மதிப்பீட்டின் அடிப்படையில் வரி வருவாயில் 75 ஆயிரம் கோடி ரூபாய் இழப்பு என்றும், திட்ட நிதியில் ரூ.25 ஆயிரம் கோடி முறையாக செலவிடப்படவில்லை என்றும் தவறான அறிக் கையை நிதி அமைச்சர் வெளியிட்டுள்ளார். வெள்ளை அறிக்கை என்பது தி.மு.க. விளம்பரம் தேட எடுத்த முயற்சிதான்.

**பொய் வழக்கு**

அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக வெற்றி அடைந்த முன்னாள் அ.தி.மு.க. அமைச்சர்கள், நிர்வாகிகள் மீது பொய் வழக்கு போடுவதை வன்மையாக கண்டிக்கிறோம்.

உள்ளாட்சி தேர்தல் நடைபெறும் நேரத்தில், கழக தொண்டர்களின் வேகத்துக்கு தடை போட்டு விடலாம் என்று தி.மு.க. பகல் கனவு காண வேண் டாம். பொய் வழக்குகளுக்கு அஞ்ச மாட்டோம். சட்டப்படி எதிர்கொள்வோம். எனவே உண்மைக்கு புறம்பாக பொய் வழக்கு போடும் தி.மு.க. அரசை கண்டிக்கிறோம்.

பத்திரிகை சுதந்திரம் பற்றி மூச்சுக்கு முன்னூறு தடவை பேசும் மு.க.ஸ்டாலின் 'நமது அம்மா' நாளிதழ் அலுவ லகத்திலும் சோதனை நடத்தியது கண்டிக்கத்தக்கது.

இவ்வாறு அவர் கூறி னார்.

**குறை கூறினீர்களே?**

கேள்வி:- சட்ட பேரவை கூட்டத் தொடர் முழுவதும் வெளிநடப்பு செய்வீர்களா? கடந்த ஆட்சியில் தி.மு.க. வெளிநடப்பு செய்ததை குறை கூறினீர்களே?

பதில்:- அந்தந்த நேரத்தில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு ஏற்பதான் இதில் முடிவு எடுக்க முடியும். தி.மு.க. அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றாததை கண் டித்துதான் இப் போது வெளிநடப்பு செய்திருக் கிறோம். நீட் தேர்வை ரத்து செய்வோம் என்று சொன்னது. ஆட்சி அமைத்து 100 நாட்கள் ஆகியும் எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லை.

**உரிய நேரத்தில் பதில்**

கேள்வி:- வெள்ளை அறிக்கை பற்றி உரிய நேரத்தில் விளக்கம் அளிக்கப்படும் என்று முன்னாள் நிதி அமைச்சர் ஓ.பி.எஸ். கூறி இருந்தாரே எப்போது பதில் அளிக்கப்படும்?

பதில்:- இதற்கு சட்டப் பேரவையிலும் நேரம் வரும்போது உரிய பதில் அளிப்போம். (அப்போத குறுக்கிட்டு பேசிய ஓ.பன் னீர்செல்வம் சட்டசபையில் எனக்கு வாய்ப்பளிக்கும் போது வெள்ளை அறிக்கை பற்றி விரிவாக பதில் அளிப் பேன் என்றார்)

கேள்வி:- தி.மு.க.வின் 100 நாள் ஆட்சியை எப்படி பார்க்கிறீர்கள்?

**எங்கள் திட்டத்துக்கு**

எடப்பாடி பழனிசாமி:- வெள்ளை அறிக்கை வெளி யிட்டுள்ளனர். இப்போது தான் பட்ஜெட் தாக்கல் செய்து இருக்கிறார்கள்.

நாங்கள் கொண்டு வந்த திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி உள்ளனர். எங்கள் திட்டங் களை செயல்படுத்தி உள்ள னர். மற்றபடி எந்த திட்டத் தையும் நிறைவேற்றவில்லை.

**சோதனை**

கேள்வி:- முன்னாள் அமைச்சர்களிடம் லஞ்ச ஒழிப்பு சோதனை நடத்தப் பட்டுள்ளதே?

பதில்:- முதலில் முன்னாள் போக்குவரத்து துறை அமைச்சர் வீட்டிலும், பிறகு முன்னாள் உள்ளாட்சி துறை அமைச்சர் வீட்டிலும் சோதனை நடத்தி உள்ளனர். இது அரசியல் காழ்ப் புணர்ச்சியுடன் நடத்தப்பட்ட சோதனை. உள்ளாட்சி துறை அமைச்சர் பதவியில் இருந்த காலத்தில் 148 விருதுகளை வாங்கியுள்ளார்.

**100 சதவீதம்**

சிறந்த உள்ளாட்சி அமைச் சர் என்கிற பெயரையும் எடுத் தவர். ஒரு லட்சத்து இரண்டா யிரம் கிலோ மீட்டர் நீள கிராம சாலைகளை அமைத்துள்ளார். புதிதாக 50 ஆயிரம் கிராம சாலை கள் அமைக்கப்பட்டன. ஏரா ள மான கூட்டுக்குடி நீர் திட் டங்கள் உருவாக்கப்பட்டன.

கோவை மாவட்டத்தில் 10 சட்டமன்ற தொகுதிகளிலும் 100 சதவீதம் அ.தி.மு.க.வுக்கு வெற்றி தேடி தந்தவர். இதையெல்லாம் பொறுத்துக் கொள்ள முடியாமல்தான் சோதனை நடத்தி உள்ளனர்.

இவ்வாறு அவர் கூறினார்.









சைவ மார்க்க எம்பிரானின் ஈசனுக்கு வேடன் கண்ணப்பன் அன்று செய்த
கண் தானமே சர்வதேச உடல் உறுப்பு தானம் எனும்
ஆகஸ்ட் 13-ம் நாளுக்கு மெத்த மகிழ்ச்சி

நமது இந்திய மத்திய அரசு சமீபகாலமாக அறிவித்த போதிலும்
இந்த புனித நாளின் அகில உலகத்திற்கே முன் உதாரண புருஷன்
திராவிட இனத்தின் தொண்மை தமிழரின் குறிஞ்சி நிலத்தில்
தோன்றிய ஆதி பழங்குடிகளான தொண்மை தமிழ் புலவர்கள்
கபிலர்! இளங்கோவடிகள்! திரிகூட ராஜப்ப கவிராயர்!
பாடிய குற்றால குறவஞ்சி குன்றகுறவன், மலைக்குறவன், வேட்டையாடும்
தனது தொழில் பெயரால் அழைக்கப்படுபவனே வேடன் கண்ணப்பன்
என்பதுவே யாவரும் அறிந்த உண்மை!

மனிதநேயம் மிகுந்த அன்னவர் இருப்பது பொய் ! இறப்பது மெய் ! என்றுணர்ந்து
மண்ணுக்கு தருவதற்கு பதிலாக வாழ்வதற்காக தவித்துக் கொண்டிருக்கும்
சக மனித குலத்திற்கு உடல் உறுப்புகளை தானமாக வழங்கினால் இறந்த பிறகும்
வாழ்கிறோம் என்ற புனித தத்துவம் தான் சர்வதேச உடல் உறுப்பு தானம்
நாளான ஆகஸ்ட் 13-ம் நாள் இவர்களது வீரத்தை புரட்சிக்கவிஞர் பாரதியார்
சீறிவரும் புலியை சிங்காரகுறத்தி ஒருத்தி துரத்தினாள் ! முறத்தினால் !
என்றே பாடியுள்ளார் இப்படி வீரத்திற்கும் இறைபக்திக்கும்
கண்ணப்பன், குருபக்திக்கு ஏகலைவன், ராஜபக்திக்கும் நட்பிற்கும் குகன்,
ஆக இவர்களே முதல் உதாரண புருஷர்களானவர்கள். குறிஞ்சிநில குன்றகுறவன் ஆன
வேடன் கண்ணப்பனை மறக்க முடியுமா? மறைக்க முடியுமா?
சிவ தொண்டர்களில் 63 நாயன்மார்களிலும் பிரசித்தி கீர்த்தி பெற்றவன்
கண்ணப்பன் புகழ் ஓங்குக! வாழ்க!!

குறிஞ்சியர் தந்தை சிம்சன் C.கோவிந்தராஜுலு
( All India Kurru Scheduled Tribes Of Kavadi, Menapadi, Sathpadi, Mendrakutthi )
Cell : 9884040147 / 9087587810


## FILM AND TELEVISION PRODUCERS' GUILD OF SOUTH INDIA

(Regd. No. 45 of 1965 –Name Change w.e.f.11.4.2003)
B1, Rams Flat, New No. 19(Old No. 5), Jagatheeswaran Street
T. Nagar, Chennai-600 017
Phone: 044-2433 4551 / 52
Email: guildsouth1234@gmail.com

FILM SECTOR

| President | Vice Presidents | Hony. Secretaries | Hony. Treasurer |
|---|---|---|---|
| DR. JAGUAR THANGAM | KALAIKOTTUTHAYAM. Ka / RATHNAM.A.M | | |

TELEVISION SECTOR

| Vice President | Hony. Secretary |
|---|---|
| SAMPATHKUMAR.P | KUTTY PADHMINI |

### முக்கிய அறிவிப்பு

**Ref.no.062/G/2021-2022** **DATE : 13/08/2021**

நமது தென்னிந்திய திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தயாரிப்பாளர்கள் சங்கம் (கில்டு) பெயரில் போலியான சங்கம் ஒன்றை தொடங்கி அதன் பெயரில் வங்கி கணக்கு ஒன்றையும் தொடங்கி உறுப்பினர்களிடம் பணம் வசூலித்து பணம் மோசடி செய்து உறுப்பினர்கள் அனைவரையும் ஏமாற்றும் வகையில் செயல்பட்டுவந்தனர், இதனை எதிர்த்து நமது சங்கத்தின் மூலம் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு பதிவுசெய்யப்பட்டு (பதிவு எண்:C.S.NO.448 OF 2019 & O.A.Nos.713 & 714 OF 2019) மாண்புமிகு உயர்நீதிமன்றத்தால் "நமது சங்கம்தான் உண்மையான சங்கம்" எனவும் வேறு எந்த நபரும் நமது சங்கத்தின் பெயரையும் சங்கத்தின் லோகோவையும் பயன்படுத்த கூடாது எனவும் மாண்புமிகு.நீதிபதி அவர்கள் தீர்ப்பு அளித்துள்ளார் என்பதை உறுப்பினர்களுக்கு தெரிவித்து கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். மேலும் ஒரு சில நபர்கள் கில்டு சங்க பொறுப்பில் இருக்கிறோம் என்றும் DISTRIBUTORஆக இருக்கிறோம் என்றும் கில்டு பெயரை சொல்லி WHATSAPP குழுக்களை தொடங்கி அதில் நமது கில்டு சங்கத்திற்கு அவப்பெயர் விளைவிக்கும் வகையில் பல பொய்யான தகவல்களை பரப்பி உறுப்பினர்களை ஏமாற்றி திரைப்படத்தினை விற்றுதருகிறேன் என்று கூறி தான்மட்டுமே பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற கெட்ட நோக்கத்தோடு, பல உறுப்பினர்களை பணம் மோசடி செய்து ஏமாற்றி வருகிறார்கள். எனவே அந்த குழுவில் நீங்கள் யாராவது இருந்தால் நமது சங்க நலனை கருத்தில் கொண்டு தயவுசெய்து அந்த குழுவில் இருந்து உடனடியாக வெளியே வந்துவிடுமாறு உறுப்பினர்கள் அனைவரையும் கேட்டுகொள்கிறோம். நமது சங்கம் கில்டு whatsapp குழு (GUILD MEMBERS ONLY 1 & GUILD MEMBERS ONLY 2) என்ற பெயரில் இருக்கும், இந்த குழுவின் நிர்வாகிகளாக சங்கத் தலைவர் திரு.ஜாகுவார் தங்கம், திரு.J.S.மணிமாறன், திரு.நாகலிங்கம், திரு.ரஞ்சித்குமார், திரு.ரங்கநாயக்குலு, திரு.அந்தோணி அர்னால்டு, திரு.மதுசுதன்ரெட்டி, திரு.சதாசிவமூர்த்தி, திரு.ஜிப்சி ராஜ்குமார், திருமதி.பிரியா, திருமதி.பானுசித்ரா ஆகியோர் இருக்கிறார்கள். எனவே இந்த குழுவை தவிர வேறு எந்த குழுவில் இருந்து சங்கம் தொடர்பாக எந்த ஒரு தகவல் வந்தாலும் அதை யாரும் நம்ப வேண்டாம் என்றும் மேலும் இது உங்கள் சங்கம் எனவே சங்கம் தொடர்பாக யார் தவறான தகவல் கூறினாலும் அதைகுறித்து சங்கத்தை நேரடியாக அணுகி உறுப்பினர்கள் அனைவரும் உங்கள் சந்தேகத்தை நிவர்த்திசெய்து கொள்ளலாம் என கேட்டுகொள்ளப்படுகிறீர்கள். மேலும் FMS மற்றும் OTT மூலமாக படத்தை விற்று தருவதற்கு பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கிறது. எனவே நமது சங்க உறுப்பினர்கள் தங்கள் திரைப்படத்தை விற்பதாக இருந்தாலும், வாங்குவதாக இருந்தாலும் நமது கில்டு சங்கத்தை நேரடியாக அணுகுமாறு கேட்டுகொள்கிறோம்.

இப்படிக்கு
தலைவர்-கலைமாமணி. Dr.ஜாகுவார் தங்கம்.S.P
மற்றும் நிர்வாகிகள், உறுப்பினர்கள்